**கொவிட்-19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலை செயற்திட்டம் - 2020**

கொவிட்-19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலை செயற்திட்டத்தின் 2020 ஏப்ரல் 04 தொடக்கம் திசெம்பர் 31 வரையான முதலாது கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 2020 ஏப்ரல் 02 ஆம் திகதிய பிஏடி 3852 ஆம் இலக்க உலக வங்கி அறிக்கையின் 52 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், சுகாதார அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு (பிஎம்யூ) செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராகவும் உள்ளன. கொவிட்-19 ஆல் திணிக்கப்படும் அச்சுறுத்தலைத் தடுத்தல், கண்டறிதல் மற்றும் பதிலளித்தல் மற்றும் இலங்கையில் பொது சுகாதாரத் தயார்நிலைக்கான தேசிய முறைமைகளை வலுப்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 25,655.7 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 128.6 மில்லியனானதுடன் அத் தொகையில் ரூபா 18,673.2 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 93.6 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டதுடன் ரூபா 6,982.5 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 35 மில்லியன் மிகுதி தொகை நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2020 ஏப்ரல் 04 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 02 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகள் கணக்கினையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) யுனிசெவ்வால் வழங்கப்படுவதற்கு இணங்கப்பட்ட மருத்துவ பொருட்களிற்கான மதிப்பிடப்பட்ட கிரயமானது உண்மையான கிரயத்தை மதிப்பீடு செய்யாமல் உள்ளபடியான செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் இம் மருத்துவப் பொருட்களின் பெறுகை மற்றும் வழங்கலை உறுதிப்படுத்துவதற்கான சான்று கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | 5, 550.40 | அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. | பொருட்களின் பெறுவனவை உறுதிப்படுத்துவதன் மூலம் கிரயம் கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன் இக் கிரயங்களை உறுதிப்படுத்தும் எழுத்துமூலமான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) கடந்த காலங்களிற்குரிய நிதி செலவினம் உரிய வாக்குப்பணப் பேரேட்டிற்கு வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினத்திற்கும் வாக்குப்பணப் பேரேட்டிற்கும் இடையே வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இச் செலவினத்திற்கான கொடுப்பனவு உறுதிச்சீட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததால் இச் செலவினத்தின் சரியானதன்மை கணக்காய்வின் போது பரீட்சிக்க முடியாதிருந்தது. | 270.85 | அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. | உரிய செலவின வாக்குப்பணத்தின் கீழ் செலவினம் கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன் இக் கிரயங்களை உறுதிப்படுத்தும் எழுத்துமூலமான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | வாகன காப்புறுதி தொடர்பான மீண்டெழும் செலவினம் மூலதனமாக்கப்பட்டுள்ளது. | 2.58 | அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. | அடுத்த ஆண்டிற்காக தயாரிக்கப்படும் நிதிக்கூற்றுக்களில் இத் தவறு சீர்செய்யப்படும். |
| (ஈ) | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அறிக்கையின் பிரகாரம் ரூபா 4,224 மில்லியனிற்கு சமமமான ஐ.அ.டொலர் 22 மில்லியன் முற்பணம் செயற்திட்டத்திற்கு பெறப்பட்டிருந்த போதிலும் இது விசேட (டொலர்) கணக்கில் ரூபா 4.09 மில்லியனாக காட்டப்பட்டுள்ளது. | 125.69 | அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (உ) | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அறிக்கைகளின் பிரகாரம் ரூபா 270.78 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.46 மில்லியன் 2020 சனவரி தொடக்கம் ஏப்ரல் வரை மீள்நிரப்பு செய்யப்பட்டிருந்த அதே நேரம் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீள்நிரப்புச் செய்யப்பட்ட தொகை ரூபா 270.85 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது. வேறுபாட்டிற்கான காரணங்கள் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 0.076 | அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஊ) | மீளாய்வுக் காலப்பகுதியின் போது 33 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளிற்காக உரிய பணம் பெறுநரிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டதை உறுதிப்படுத்தும் ஒப்புதல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்காததுடன் நிறுத்தி வைத்தல் பணத்திற்காகவும் பணம் பெற்றுக்கொண்டதை உறுதிப்படுத்தும் ஒப்புதல்கள் | 42.40 | அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. | இக் கிரயங்களை உறுதிப்படுத்தும் எழுத்துமூலமான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வுக் காலப்பகுதியின் போது 56 சந்தர்ப்பங்களில் 7 வைத்தியசாலைகளிற்கு அரசாங்க வருமானம் அனுப்பப்பட்டிருந்தது. | | | |
| (எ) | மீளாய்வுக் காலப்பகுதிக்கான அந்நிய செலாவணி நட்டம் தேறிய சொத்துக்களில் தனியாக காட்டப்படாமல் நடைமுறை சொத்தொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2.28 | அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. | அடுத்த ஆண்டிற்காக தயாரிக்கப்படும் நிதிக்கூற்றுக்களில் இத் தவறு சீர்செய்யப்படும். |
| (ஏ) | இலங்கை தரைப்படையால் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணத்தின் பெறுமதியானது 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி இருப்பை பொருட்படுத்தாமல் மீளாய்வுக் காலப்பகுதிக்கான செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 188.74 | அவதானிப்புடன் இணங்கப்படவில்லை. இம் மிகுதி பொருட்கள் எதிர்காலத்தில் தனிமைப்படுத்தல் நிலையங்கள் மற்றும் இடைநிலை பராமரிப்பு நிலையங்களில் சீரான செயற்பாட்டை வழங்குவதற்கு பயன்படுத்தப்படும். | காலப்பகுதிக்குரிய செலவினம் தெளிவாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | 03 இலவச robotic magnetic bead-based RNA இயந்திரங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டிருக்காததுடன் இது நிதிக்கூற்றுக்ககளில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில் லை. | - | அவதானிப்புடன் இணங்கப்படவில்லை. 03 இலவச robotic magnetic bead-based RNA இயந்திரங்களில் ஒன்று மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்தில் பயன்படுத்தப்படுகின்ற து. ஏனைய இரண்டு இயந்திரங்களும் இரத்தினபுரி போதனா வைத்தியசாலை மற்றும் கண்டி தேசிய வைத்தியசாலை ஆகியவற்றிற்கு அனுப்பப்பட்டுள்ளன. | இவ் இயந்திரங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்தின் 20(1) ஆம் பிரிவு மற்றும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2019 யூலை 09 ஆம் திகதிய சீஜீஆர்ஐ/2019/03-01 (ஐஎன்எஸ் & சீஐஆர்) ஆம் இலக்க கடிதம் | ரூபா 3.390 மில்லியன் தொகையான பெறுமதி சேர் வரி முறையான வரி விலைச்சிட்டை இல்லாமல் 27 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. வழங்குநர் வற் இலக்கம் மற்றும் வரி விலைச்சிட்டைகளுடன் வற்றிற்காக கோரியிருந்ததால் அவை செலுத்தப்பட்டிருந்தன. | முறையான வரி விலைச்சிட்டை மீது பெறுமதி சேர் வரி செலுத்தப்பட வேண்டியதுடன் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் உரிய தகவல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வுக் காலப்பகுதியின் போது ரூபா 27.19 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டு சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகங்களிற்கு வழங்கப்பட்ட மூன்று double கெப் வாகனங்கள் 2021 செப்தெம்பர் 28 அளவில் அவ் அலுவலகங்களிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படவில்லை. குறித்த சுகாதார வைத்திய அதிகாரிகளின் அலுவலகங்களிற்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களின் பணிக்காக பயன்படுத்தப்பட்ட 4 double கெப் வாகனங்களை அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இம் மூன்று வாகனங்களும் ஒதுக்கப்பட்ட அலுவலகங்களிற்கு விரைவாக வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) செயற்திட்டம் ரூபா 239.48 மில்லியன் கிரயத்தில் 805 மோட்டார்சைக்கிள்களை கொள்வனவு செய்து பொதுச் சுகாதார பரிசோதகர்களிற்கு வழங்கியிருந்தது. எனினும் உத்தியோகத்தர்கள் மற்றும் அமைச்சிற்கிடையே எழுத்துமூலமான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. | இரண்டு தரப்பினர்களிற்கும் இடையே உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | செயற்திட்டம் வெலிகந்த கொவிட் 19 சிகிச்சை நிலையத்தின் நிர்மாணத்திற்குத் தேவையான கட்டிட மூலப்பொருட்கள் மற்றும் உபகரணத்தை கொள்வனவு செய்வதற்காக ரூபா 12.79 மில்லியன் தொகையை செலுத்தியிருந்தது. எனினும் இவ் அனைத்து மூலப்பொருட்களும் நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது எனவும் தேவையான நியமத்தில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது எனவும் உறுதிப்படுத்தல் எதுவும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படவில்லை. வெலிகந்த கொவிட்-19 சிகிச்சை நிலையத்தின் நிர்மாணத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து மூலப்பொருட்களும் உபகரணங்களும் நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்பட்டன. | கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து மூலப்பொருட்களும் நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது எனவும் தேவையான நியமத்தில் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்தது எனவும் குறிப்பிட்டு பொறியியல் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | அம்பாறை மாவட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்ட வீடமைப்பு திட்டத்திற்கு மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 5.45 மில்லியன் தொகையையும் நீரை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 4.5 மில்லியன் தொகையையும் செயற்திட்டம் செலுத்தியிருந்தது. எனினும் வேலை உரிய நேரத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததா என்பதை மதிப்பிடுவதற்கு எழுத்து மூலமான சான்றெதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அச் செயற்பாடுகளின் போது மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக தேவையான ஆவணங்கள் மற்றும் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |